1974 மார்ச் 18]

இல்லங்களுக்கு பள்ளியிலும், விடுதியிலும் அவர்கள் அந்த இடங்களிலும், சுற்று வட்டாரத்திலும் காய்கறி பயிரிடும் திட்டத்தை இன்றைக்கும் கடைப் பிடித்து வருகிறார்கள். ஆனால் சில இடங்களில் அவர்கள் செய்யவில்லை. ஆனால் நலத்துறை மூலமாக ஆசிரியர்கள், இல்லக் காப்பாளர்கள் காய் கறித்தோட்டம் வைப்பதற்கான திட்டத்தை வற்புறுத்தப்படுகின்ற முறையில் செய்கிறார்கள். ஆனால் கேள்வி அதுவல்ல. திருச்சி மாவட்டத்தில் முட்டை, பால் கொடுக்கப்படுகிறதா என்பதைப்பற்றி. இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். கொடுக்கப்படுகிறது என்று நான் சொல் கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எதையெதையோ போட்டு குழப்பிக்கொண்டிருக்க வேண்டாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, திருச்சி ஜில்லா வில் எத்தனை ஹாஸ்டல்களில் இந்த பால், முட்டைகள் வாரத்தில் எத்தனை நாட்கள் கொடுக்கப்படுகிறது ஒழுங்கான முறையில் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, எல்லா ஹாஸ்டல்களிலும் வாரத்திற்கு ஐந்து நாட்கள் கொடுக்கப்படுகிறது. சில யிடங்களில் முட்டை கிடைக்கவில்லை என்று சொல்லப்படும் இடத்தில்— பால் கொடுக்கப்படுகிறது. எப்படியும் வாரத்திற்கு ஐந்து நாட்கள் முட்டை இல்லாத இடத்தில் பால் கொடுக்கப்படுகிறது. எல்லா ஹாஸ்டல் களிலும்தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

வைகையாற்றின் குறுக்கே தரைப் பாலம்.

*479. வினா. திரு. சு. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, படமாத்தூர்—திருப்பாசேத்தி இணைப்புச் சாலை யில் வைகையாற்றின் குறுக்கே தரைப் பாலம் கட்டும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

நல்லாற்றின் குறுக்கே பாலம்.

*480. வினா. திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் நல்லாற்றின் குறுக்கே அங்கேரி பாளையம் செட்டிப்பாளையத்திற்கு இடையில் பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, மேற்படி இடத்தில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் ஆனால் விரைவாக பாலம் கட்டுவதற்கான முறையில் தலைமைப் பொறியாளரிடமிருந்து இங்கே